**முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு**

**O.S.No.260/2018**

2025 ஆம் வருடம் நவம்பர் மாதம் 21 ம் தேதியன்று PW.1 ஆக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7 ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுதா | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**வா.சா.1 ன் முதல் விசாரணை :**

நான் வழக்கில் வாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன். என் தரப்பு சான்றாவணங்களாக 25.07.2014 ம் தேதிய சாமியாத்தாள், வெற்றிவேல், குமரேசன் ஆகியோர் எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1,** 28.08.2017 ம் தேதியில் நான், வெற்றிவேல் மற்றும் குமரேசனுக்கு எழுதி பெற்ற தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2**, அதே தேதியில் குமரேசன் என்னிடம் எழுதி பெற்ற தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக தாக்கல் செய்கிறேன்.